1987 நவம்பர் 13]

மானால் கட்டிவிட்டு பெற்று விட முடியும். இதைச் சக்தியற்றதாக ஆக்கக்கூடாது என்பதுதான் மாண்புமிகு உறுப்பினர் கூறுவதைப் போன்று அரசாங்கத்தினுடைய நோக்கம். அதற்கான முயற்சிகளை அரசு தீவிரமாக மேற்கொள்ளும்.

காட்பாடி ஒன்றியத்திற்கென நிலவள வங்கி.

87— (*வினா எண் 15469) திரு. கோ. இரகுபதி : மாண்புமிகு நீதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

காட்பாடி தொகுதியில் காட்பாடி ஒன்றியத்திற்கென தனியாக ஒரு நிலவள வங்கி ஆரம்பிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, காட்பாடி தொகுதியில் காட்பாடி ஒன்றியத்திற்கென தனியாக ஒரு நிலவள வங்கி துவக்கக் கோரி கோரிக்கை எதுவும் இதுவரை வரப்பெறவில்லை. எனவே, இப்பகுதியில் புதிய நிலவள வங்கி துவக்கப்படும் பிரச்சினை எழவில்லை.

திரு. கோ. இரகுபதி : மாண்புமிகு தலைவர் அவர்களே, காட்பாடி வட்டாரத்தில் வேலூர் நிலவள வங்கி ஒரு பெரிய வங்கியாகும். அணைக்கட்டு, வேலூர் ஒன்றியம், மேலும் வேலூர் நகரம், காட்பாடி ஒன்றியம் ஆகியவை சேர்ந்த ஒரு பெரிய நிலவள வங்கியாக இருக்கிறது. அந்த வேலூர் நிலவள வங்கியில் காட்பாடி வட்டாரம் இணைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. ஆனால், கே. வி. குப்பம் நிலவள வங்கி என்பது அதற்கான நார்ம்ஸ் அடிப்படையில் தகுதி பெறாத சூழ்நிலையில் காட்பாடி தொகுதியில் இருக்கிறது. வேலூர் நிலவள வங்கியைப் பிரித்து காட்பாடியில் இணைத்து ஒரு வங்கி ஆரம்பிக்க வேண்டுமென்று அந்தத் துறையின் மூலமாக அரசாங்கத்திற்குக் கோப்புகள் வந்திருப்பதாக அதிகாரிகள் சொல்லுகிறார்கள். ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதனைக் கண்காணித்து காட்பாடி—கே. வி. குப்பம் ஒன்றியத்தை இணைத்து ஒரு நிலவள வங்கியை ஏற்படுத்தி, காட்பாடியைத் தலைமையகமாக அமைக்க முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, வேலூர் நிலவள வங்கியின் விவகார எல்லையில் வேலூர் வட்டத்தைச் சார்ந்த வேலூர், அணைக்கட்டு, கணியம்பாடி வட்டாரங்களும், மற்றும் காட்பாடி வட்டாரமும் அதனுள் அடங்கியிருக்கின்றன. ஆகவே, காட்பாடியைப் பொறுத்தவரையில் வேலூரிலிருந்து 3 கிலோ மீட்டர் தூரத்தில் அது அமைந்திருக்கிறது. அதுமட்டுமல்லாமல் காட்பாடி வட்டாரத்தை பொறுத்தவரையில் அதை ஒரு பெருநகரமாகச் சொல்லக்கூடிய அளவில் எதுவும் இல்லை. பெரும்பாலும் வேலூர் நகரில் வியாபாரம் அதிகமாக நடப்பதால் கடன் வாங்குகிற வசதியும்,

விற்பனை செய்கிற வசதியும், மற்ற வசதிகளும் வேலூர் நகரத்தை பொறுத்தே அமைந்திருக்கிறது. ஆகவே, வேலூர் நிலவள வங்கியின் மூலமாகப் பெறுகிற கணக்கைப் பார்த்தாலும்கூட, பெரும் பகுதி காட்பாடி வட்டாரம் வாங்குகிற சூழ்நிலையில்தான் இருக்கிறது. 1984–85ஆம் ஆண்டில் 144 பேர் 6 இலட்சத்து 38 ஆயிரம் ரூபாய் கடன் பெற்றிருக்கிறார்கள் என்றால் அதிலே 77 பேர், கிட்டத்தட்ட பாதி பேர்கள் 2 இலட்சத்து 23 ஆயிரம் ரூபாயைக் காட்பாடி பகுதியில் இருப்பவர்கள் பெற்றிருக்கிறார்கள். 1985–86ஆம் ஆண்டில் 102 பேர்களில் கால்வாசிப் பேர் பெற்றிருக்கிறார்கள். 1986–87ஆம் ஆண்டில் 60 பேர்களில் கிட்டத்தட்ட 28 பேர்கள் பெற்றிருக்கிறார்கள். ஆகவே, இந்த அடிப்படையிலே பார்க்கிறபோது, மேலும், இந்த வேலூர் நிலவள வங்கியினுடைய 30–6–1987 கணக்குப்படி எடுத்துப் பார்த்தாலும், மொத்தக் கடன் நிலுவை 74 இலட்சத்து 82 ஆயிரம் ரூபாயாக இருக்கிறது. நபார்ட் குறிப்பிட்டிருக்கிற ஒரு கணக்கின்படி 70 இலட்ச ரூபாய் அளவிற்கு இருந்தால்தான் அது தன்னிறைவு பெற்ற ஒன்றாகக் கருத முடியும். இல்லாவிட்டால், இந்த நிலவள வங்கியைச் சேர்த்துக்கொள்ள இயலாது என்று நபார்ட் கூறும். ஆகவே, காட்பாடியைப் பிரித்துவிடுவோமேயானால், வேலூர் நிலவள வங்கி அந்தத் தகுதியை இழந்து நபார்டிலேயிருந்து பெறக்கூடிய பல்வேறு வசதி வாய்ப்புகளை இழக்கும். இது ஒன்று, மற்றொன்று, காட்பாடியிலே தனியாக நிலவள வங்கி வைத்து அதை வெற்றிகரமாகவும், சிறப்பாகவும் —மூன்றாவது கிலோ மீட்டரிலே வைப்பதன் மூலம்— நடத்த முடியாது என்ற காரணத்தாலும்தான் இப்போது இருக்கிற நிலையே எல்லோருக்கும் வசதியாகவும், வாய்ப்பாகவும் அமைந்திருக்கிற காரணத்தாலும், இது நிலை பெற்ற ஒன்றாக அமைய முடியும் என்ற காரணத்தாலும், இந்த நிலையே நீடிக்கலாம் என்ற கருத்து மேற்கொள்ளப்பட்டு இருக்கிறது.

கும்பகோணம் பேருந்து நிலையம்

88—(*வினா எண் 7015) திரு. வி. தங்கவேலு, திரு. ஆ. நடராசன் மற்றும் திரு. எஸ். ராசாராமன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்பகோணம் பேருந்து நிலையத்தை விரிவுபடுத்தும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, (அ) ஆம்.